**நாள் : 22.12.2023**

**அசல் வழக்கு எண்: 132/2018**

வா.சா.-1 தங்கமணி முன்னிலை சத்தியபிரமாணம் செய்யப்பட்டதன்பேரில் வாதி தரப்பு குறுக்கு விசாரணை -

1. நான் தாக்கல் செய்துள்ள வழக்கிற்கு விளக்கம் சொன்னது நான்தான் என்றால் சரிதான். 04.08.1997 நாகப்பட்டினம் மாவட்ட பதிவாளர் பிறப்பித்த உத்தரவை ரத்து செய்ய வேண்டிதான் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான் . என்னுடைய முதல் கோரிகை அதுதான் என்றால் சரிதான் . எனது 2 வது கோரிக்கை இந்த வழக்கின் பிரதிவாதி மேற்படி தாவா சொத்தை யாருக்கும் விற்கவோ, எந்தவித பாராதீனமும் செய்யக்கூடாது என்றால் சரிதான். அது தவிர்த்து வேறு கோரிக்கைகள் உள்ளதா என்றால் இல்லை.

2. இந்த வழக்கு சொத்து சம்மந்தமாக 1996 ல் எங்களுக்குள் பிரச்சனை ஏற்பட்டது என்றால் சரிதான். 1996 முதல் நாளது தேதிவரை எத்தனை வருடங்கள் ஆகிவிட்டது என்றால் சுமார் 36 வருடங்கள். இந்த 36 வருடங்களாக வழக்கு சொத்து யாருடைய அனுபவத்தில் இருக்கிறது என்றால் என்னிடத்தில்தான் உள்ளது . நான் தாக்கல் செய்துள்ள வாதுரையில் வழக்கு சொத்து என்னுடைய அனுபவத்தில் இருக்கிறது என்ற விவரத்தை குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் எனக்கு நினைவில்லை.

3. தாவா சொத்து என்னுடைய அனுபவத்தில் உள்ளது என்பதை காண்பிக்க ஏதேனும் ஆவணங்கள் உள்ளதா என்றால் எனக்கு நினைவில்லை . வழக்கு தாவா சொத்தில் மற்றும் இதனுடைய தொடர்புடைய வழக்குகளில் பூமி அமைப்பில் என்ன இருக்கிறது என்றால் தற்போது காலியிடமாகத்தான் இருக்கிறது.

4. கற்றிறந்த பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் சாட்சியிடம் ஒரு புகைப்படத்தை காண்பித்து எங்களது குடும்பத்திற்கு சொந்தமான திருமண மண்டபமா என்று கேட்டதற்கு ஆம் என்று சொல்கிறார். மேற்படி புகைப்படம் குறுந்தகடுடன் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படுகிறது . மேற்படி புகைப்படம் பி.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

5. கடந்த 30 ஆண்டுகளில் நான் வழக்கு சொத்திற்கு வரி செலுத்தியதற்கான ரசீதுகள் ஏதும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை . வழக்கு தாவா சொத்தில் லாரி எடைபோடும் நிலையத்திற்காக கட்டுமான அனுமதி நகராட்சியிடமிருந்து பெற்று , அதன் அடிப்படையில் கட்டப்பட்டுள்ளது என்றால் அது பற்றி தெரியாது . வழக்கு தாவா சொத்தானது எங்களுடைய திருமண மண்டபத்திற்கும் தென்புறத்தில் உள்ளது என்றால் சரிதான் . எங்கள் திருமணத்திற்கு ரோடு எந்த திசையில் ரோடு உ்ள்ளது என்றால் வடக்கு தெற்காக உள்ளது.

6. எங்களது திருமண மண்டபத்திற்கு தென்புறத்தில் அரசு மதுபான கூடம் உள்ளதா என்றால் தெரியாது. நான் எனது சொத்தை தினசரி பார்வையிடும் பழக்கம் உண்டா என்றால்

இல்லை அவ்வப்போது பார்த்துக்கொள்வேன். எங்களுக்கு சொந்தமாக மருத்துவமனை உள்ளதா என்றால் ஆம் உள்ளது . மணி மருத்துவமனை கட்டிடம் இருக்கிறதா என்றால் இருக்கிறது . அதற்கு நேர் எதிர்த்தாற்போல் வழக்கு தாவா சொத்து பார்வைக்கு படும் தூரத்தில் இருக்கிறதா என்றால் ஆம் இருக்கிறது . எனது வீடு எங்குள்ளது என்றால் மகாமாரியம்மன் கோவில் தெருவில் உள்ளது.

7. கடந்த 40 வருடங்களாக நான்தான் எனது திருமண மண்டபம் மற்றும் எனது சொத்துக்களை அந்த வழியாக சென்று நிர்வாகித்துவருகிறேன் என்றால் சரியல்ல . அதற்காக ஆள் வைத்துள்ளேன். இந்த வழக்கு தாவா சொத்து எனது அனுபவத்தில் இருக்கிறது என்றும் மேற்படி சொத்தில் பிரதிவாதி உள்நுழையக்கூடாது என்று பரிகாரம் ஏதும் கேட்டுள்ளேனா என்றால் இல்லை. வழக்கு தாவா சொத்தில் கடந்த 24.12.1996 முதல் நாளது தேதி வரை பிரதிவாதிகள் கட்டிடம் கட்டியும் அனுபவத்தில் இருந்து வருகிறார்கள் என்று சொன்னால் சரியல்ல.

8. 1996 முதல் வழக்கு தாவா சொத்தின் நாளது தேதிவரை வரி விதிப்புகள் யார் பெயரில் உள்ளது என்றால் எனக்கு தெரியாது . வழக்கு தாவா சொத்தைப்பொறுத்து நான் ஏதும் வரி செலுத்தியுள்ளேனா என்றால் இல்லை. எனது கட்சிப்படி தாவா சொத்து காலிமனை என்று சொன்னால் சரிதான் . காலிமனையாக இருந்தால் நகராட்சியில் காலிமனை வரி என்று போடுவார்களா என்றால் ஆம் தற்காலிகமாகத்தான் போடுகிறார்கள் கடந்த 10 ஆண்டுகளாகத்தான் போடுகிறார்கள். நான் அவ்வாறு ஏதும் வரி செலுத்தியுள்ளேனா என்றால் இல்லை.

9. கடந்த 36 ஆண்டுகளாக நான் வருவாய்துறை ஆவணங்களில் தாவா சொத்தைப்பொறுத்து யார் பெயரில் ஆவணங்கள் உள்ளது என எடுத்து பார்த்தேனா என்றால் இல்லை. பி.சா-ஆ.1 ல் மன்னார்குடி நகராட்சி ஒரு அறிவிப்பு பலகை வைத்துள்ளார்களா என்றால் ஆம் பொதுமக்களுக்கான அறிவிப்பு நானும் பொதுமக்கள்தான் . மேற்படி ஆவணத்தில் வரி செலுத்தாததால் நகராட்சியால் கையகப்படுத்தப்பட்டுள்ளது என அறிவிப்பு பலகை வைக்கப்பட்டுள்ளதா என்றால் ஆம் அது எனது மனைவியின் சொத்து என்னுடையது அல்ல . எனக்கும் பிரதிவாதி மற்றும் அவருடைய தகப்பனார் , சகோதரர்களுக்கிடைய வழக்கு தாவா சொத்து சம்மந்தமாக பிரச்சனை எப்போது ஏற்பட்டது என்றால் 1997 ல் ஏற்பட்டது.

10. மேற்படி 1997 ம் ஆண்டிலிருந்து எனக்கும் பிரதிவாதி குடும்பத்திற்கும் இடையே விரோதம் உள்ளதா என்றால் ஆம் . இந்த கட்சி என்வென்றால் பிரதிவாதியும் அவருடைய குடும்பத்தாரும் எனது கையொப்பத்தை மோசடியாக போட்டு 4 சாசனங்கள் எழுதியுள்ளார்கள் என்பதுதான் என்றால் சரிதான். எனது கையெழுத்து மோசடியாக ஏற்படுத்தப்பட்டுள்ளது என்று எனக்கு எப்போது தெரியும் என்றால் 1997 ல் தெரியும். பிரதிவாதியும் அவருடைய குடும்பத்தாரும் மோசடியாக கையொப்பம் செய்துவிட்டார்கள் என்று போலீஸாரிடம் ஏதும் நான் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. நீதிமன்றத்தில் ஏதேனும் புகார் செய்தேனா என்றால் இல்லை.

மேற்படி பரிவர்த்தனை தொடர்பாக வேறு ஏதும் குற்றவழக்குகள் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 1997 ல் தான் மேற்படி 4 சாசனங்களும் ஏற்படுத்தப்பட்டது என்றால் சரிதான்.

11. 1997 ல் எனக்கு பிரச்சனை தெரிந்திருந்தும் 2013 ம் ஆண்டுதான் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆம். சாட்சி சொல்கிறார் நான் காலதாமதத்தை ரத்து செய்வதற்கான நடவடிக்கை எடுத்தேன் . 04.08.2009 ல்தான் இந்த வழக்கை முதன் முதலில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஆம் .1997 லிருந்து 2009 வரை யான காலகட்டத்தில் 12 ஆண்டுகள் காலதாமதாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

27. 1997 ல் நாகப்பட்டினம் மாவட்ட பதிவாளர் உத்தரவிற்கு எப்போது நான் நகல் எடுத்தேன் என்றால் 1997 ல் எடுத்துவிட்டேன். நான் 1997 ல் நகல் வாங்கியபிற்கு 2009 வரை 12 ஆண்டுகள் வழக்கு தாக்கல் செய்யாமல் காத்திருந்தேன் என்றால் பல வழக்கறிஞர்களை சந்தித்து சட்ட ஆலோசனை பெற்று அதன் பிறகே தாக்கல் செய்தேன் . மேற்படி சங்கதியை எனது வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை . கடந்த 30 ஆண்டுகளில் இந்த நீதிமன்றத்தில் தரப்பினராக எத்தனை வழக்குகள் தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனக்கு நினைவில் இல்லை.

12. நினைவில் வைத்துக்கொள்ளமுடியாத அளவிற்கு வழக்குகளா ? என்றால் ஆம் நிறைய சொத்துக்கள் நிறைய வழக்குகள். நான் அவ்வாறு தாக்கல் செய்த வழக்குகளில் எனது கையொப்பமிட்ட ஆவணங்கள் இருக்கிறதா என்றால் ஆம் நீதிமன்றத்தில் இருக்கிறது . நான் ரத்துசெய்ய வேண்டி கேட்ட 4 ஆவணங்களில் உள்ள மோசடியாக போட்டதாக கூறப்படும் கையெழுத்துகளை பொறுத்து இந்நீதிமன்றத்தில் உள்ள எனது கையெழுத்து அடங்கிய ஆவணங்களோடு ஒப்பிட்டு , ஒப்பீடு செய்ய ஏதேனும் நடவடிக்கை எடுத்தேனா என்றால் இல்லை. எனது கையெழுத்துகள் இந்நீதிமன்றத்தைத் தவிர அரசு சம்மந்தமான பரிவர்த்தனையில் உள்ள அலுவலகங்களில் உள்ளது என்றால் சரிதான் . அதனோடும் மேற்படி மோசடியாக போட்டதாக கூறப்படும் கையெழுத்துடன் ஒப்பீட்டு பார்க்க நான் நடவடிக்கை ஏதும் எடுத்தேனா என்றால் இல்லை.

13. பிரதிவாதி சம்மந்தப்பட்ட வழக்கு தாவா சொத்து மற்றும் அது தொடர்புடைய சொத்துகளின் நாளது தேதிய சந்தை மதிப்பு எவ்வளவு என்றால் எனக்கு தெரியாது . மேற்படி சொத்துகளில் தற்காலிக மதிப்பு 5 கோடி இருக்கும் என்று சொன்னால் எனக்கு மார்க்கெட் நிலவரம் தெரியவில்லை. நான் மதிப்பு மிகுந்த சொத்தை முறையாகத்தான் 1996 ல் பரிவர்த்தனை செய்துகொடுத்தேன் அதனால் தான் மதிப்புமிகு சொத்தை பொறுத்து மேற்படி நான்கு பத்திரங்களில் உள்ள கையெழுத்தைப்பொறுத்து எந்தவித குற்றவியல் நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல.

14 . நான் 1977 ம் ஆண்டு முதல் வருமானவரி செலுத்திவருகிறேன் என்றால் சரிதான். 1996 லிருந்து வருமானவரி கணக்கில் வழக்கு தாவா சொத்தைப்பொறுத்து எனது சொத்தாக காட்டியுள்ளேனா என்றால் எனக்கு நினைவில் இல்லை.

15. நான் கூறுவது போல் பிரதிவாதி செய்த மோசடியான செயலுக்கு மாவட்ட பதிவாளரும் உடந்தையாக இருந்தார் என்றால் சரிதான் . மாவட்ட பதிவாளரும் பிரதிவாதிகளுடன் சேர்ந்து

கூட்டு சதிசெய்து ஒருமன சாய்வுடன் ஒத்துமொத்தமாக கூட்டு சதி செய்து குற்றமுறு எண்ணத்தோடு பிரதிவாதியின் துண்டுதலின்பேரில் மேற்படி மாவட்ட பதிவாளர் சட்டப்படி கடைபிக்கவேண்டிய விதிமுறைகளையும் நடைமுறைகளையும் கடைபிடிக்காமல் சட்டத்திற்க புறம்பாக செயல்பட்டுள்ளார் என நான் கூறியுள்ளேன் என்றால் சரிதான்.

16. மேற்படி மாவட்ட பதிவாளர் என்பது நாகப்பட்டின மாவட்ட பதிவாளர் என்றால் சரிதான். அவரது பெயர் வெங்கடேசம் ஆகும். மேற்படி மாவட்ட பதிவாளர் மீது தனிப்பட்ட முறையில் குற்ற வழக்கு ஏதும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை . காவல்துறையிலும் புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான் . அவர் ஒருமன சாய்வுடன் செயல்படுகிறார் என்பதை பொறுத்து ஐ.ஜீ-க்கு துறைரீதியாக நடவடிக்கை எடுக்க நடவடிக்கை எடுத்தேனா என்றால் இல்லை.

17. மேற்படி வா .சா.ஆ.1வது ஆவணம் 04.08.1997 ல் மன்னார்குடி சார்பதிவாளர் அலுவலகத்தில் மாவட்ட பதிவாளரின் உத்தரவு படி பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள இதர ஆவணங்களும் மாவட்ட பதிவாளரின் உத்தரவு படி பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான் . நான் தாக்கல் செய்துள்ள இதர வழக்குகளுடன் மேற்படி ஆவணங்கள்தான் உள்ளன.

18. வா.சா.ஆ.1 ஆன ஆவணம் பிரதிவாதியாலும் அவரது குடும்பத்தாராலும் மன்னார்குடி சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவிற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான் . நான் ஒப்புக்கொண்டது போல் மன்னார்குடி சார்பதிவாளர் அலுவலகத்திற்கு நான் மேற்படி ஆவணத்தை பதிவுசெய்து கொடுக்க வரவில்லை என்று சொன்னால் சரியல்ல.

19 நான் பதிவு செய்ய முன்னிலையாகாத காரணத்தினால் சார் பதிவாளர் அலுவலகத்திலிருந்து அழைப்பாணை எனக்கு நேரில் சார்வு செய்யப்பட்டதா என்றால் ஆம் சார்வு செய்யப்பட்டது. எப்பொழுது அழைப்பாணை சார்வு செய்யப்பட்டது என்றால் 24.12.1996 அன்று சார்வு செய்யப்பட்டது-

20. நான் மன்னார்குடி சார்பதிவாளர் அலுவலகத்தில் முன்னிலையானேனா என்றால் முன்னிலை ஆனேன் . மேற்படி சார்பதிவாளர் என்னிடம் இந்த பிரதிவாதி மற்றும் குடும்பத்தார்கள் 4 ஆவணங்கள் எழுதிக்கொடுத்ததாகவும் அதனை சாசனம் செய்து தர என்னிடம் கேட்டார்கள் என்றால் சரிதான். நான் அதை மறுத்தேன் என்றால் சரிதான். எதற்காக மறுத்தேன் என்றால் அதில் கையெழுத்து இல்லாத ஆவணம் என்பதால் நான் மறுத்துவிட்டேன். மேற்படி மறுத்ததற்கு நான் எனது தரப்பில் எழுத்துப்பூர்வமாக ஆட்சேபனை ஏதும் கொடுத்தேனா என்றால் இல்லை.

21. மேற்படி 4 ஆவணங்களையும் சார் பதிவாளர் என்னிடம் காண்பித்தாரா என்றால் ஆம் காண்பித்தார் அதில் கையொப்பங்கள் இல்லை . தற்சமயம் என்னிடம் காட்டப்படும் ஆவணங்களில் கையொப்பம் உள்ளது . 20.12.1995 ல் நானும் எனது மனைவியும் இந்த பிரதிவாதிகளுக்கு பிரதிவாதி தரப்பு குடும்பத்தாருக்கும் தாவா வழக்கு சொத்து குறித்து ரூ.17,23,000/-க்கு ஒரு ஆவணம் எழுதிக்கொடுத்துள்ளோம் என்று சொன்னால் இல்லை . எனது

மனைவி கையெழுத்து எனக்கு தெரியுமா என்றால் தெரியும் . நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் ஆவணத்தில் உள்ள கையெழுத்து என் மனைவி கையெழுத்து அல்ல.

22. நான் தற்சமயம் என்னுடைய கையொப்பத்தை SRV தங்கமணி என போடுகிறேன் என்றால் சரிதான் 01.03.1995 க்கு முன் V தங்கமணி என போடுவேன். எனது மனைவியும் பதிவு பெற்ற மருத்துவர் என்றால் சரிதான் . அவருக்கும் அரசுதுறை ஆவணங்களிலும் வருமான வரி சம்மந்தமான ஆவணங்களிலும் அவர் கையொப்பம் செய்த ஆவணங்கள் உள்ளது என்றாலும் எனக்கும் இதுபோன்ற ஆவணங்கள் உள்ளது என்றாலும் சரிதான்.

23. எனது கையொப்பத்தை மோசடியாக போட்டதைப்பொறுத்து அதை நிருபிக்க இந்நீதிமன்றத்தில் கையெழுத்து நிபுணர் சம்மந்தமாக மனு ஏதும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. மேற்படி 4 ஆவணங்கள் ஏற்பட்டு எத்தனை வருடங்கள் ஆகிறது என்றால் சுமார் 36 ஆண்டுகள் ஆகிறது . பிரதிவாதிகள் மற்றும் குடும்பத்தார்களுடன் பகை உள்ள சூழ்நிலையில் மேற்படி ஆண்டுகளில் காவல்துறையின் மூலம் ஏதும் நடவடிக்கை எடுத்துள்ளேனா என்றால் இல்லை.

24. பிரதிவாதிகள் மீது நில அபகரிப்பு வழக்கு ஏதும் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை . நான் 36 ஆண்டுகள் பல்வேறு வழக்கறிஞரிடம் ஆலோசனை பெற்றேன் என்று சொன்னதைப்பொறுத்து இந்த பிரதிவாதிகள் மீது நில அபகரிப்பு நடவடிக்கை ஏதும் எடுத்தேனா என்றால் இல்லை . மோசடியான ஆவணம் ஏற்படுத்தியது குறித்து மாவட்ட பதிவாளரிடம் எழுத்துப்பூர்வமாக என்ன ஆட்சேபனை தெரிவித்தேனா என்றால் தெரிவித்தேன்.. அதை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

25. 20.01.1997 ல் மேற்படி ஆவணங்கள் சம்மந்தமான மேல்முறையீடு துவங்கப்பட்டது என்றால் சரிதான் . எனது தரப்பில் நாகப்பட்டினத்தை சேர்ந்த வழக்கறிஞர் ராஜேந்திரன் முன்னிலையானார் என்றால் சரிதான் . பிரதிவாதிகள் தரப்பில் சங்கரன் என்பவர் ஆஜர் ஆனார் என்றால் ஆஜர் ஆனார் நீங்களும் வந்தீர்கள் . மாவட்ட பதிவாளர் பிரதிவாதிகளுக்கு சாசனம் ஏற்படுத்தித்தர உத்தரவிட்டதை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

26. மேற்படி உத்தரவினை பார்த்தால் யார் யார் முன்னிலையானர்கள் என்ற விவரம் தெரிய வரும் என்றால் சரிதான் . 04.08.1997 ம் தேதியிட்ட மாவட்ட பதிவாளர் உத்தரவின் பேரில்தான் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் . மேற்படி ஆவணங்கள் இந்நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் **சாட்சி சொல்கிறார் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த ஆவணங்கள் காணாமல் போனால் நான் என்ன செய்வேன் என கூறுகிறார்.**

27. 04.08.1997 ஆம் தேதியிட்ட ஆவணத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேனா என்றால் நான் தாக்கல் செய்துள்ள ஞாபகம் உள்ளது - மேற்படி மோசடி ஆவணம் தொடர்பாக 20.01.1997 முதல் 04.08.1997 வரை விசாரணை நடைபெற்றது என்று சொன்னால் சரிதான் . இருதரப்பு விசாரணையும் வழக்கறிஞர் மூலம் நடைபெற்றது என்றால் சரிதான் நானும் ஆஜர் ஆனேன். உரிமையியல் நீதிமன்றத்தில் நடைபெறுவதுபோல் நீதிமன்ற நடவடிக்கை இருந்தது என்றால் சரிதான்.

28. மேற்படி விசாணையின் முடிவில் 04.08.1997 ம் தேதி மேற்படி பதிவாளர் பிரதிவாதி மற்றும் அவரது குடும்பத்தினர் சம்மந்தப்பட்ட ஆவணங்களை பதிவு செய்ய உத்தரவிட்டார் என்றால் சரிதான். மேற்படி உத்தரவின் நகல்கள் எனக்கும் எனது வழக்கறிஞருக்கும் சார்வு செய்யப்பட்டது என்றால் நான் வாங்கவில்லை நான் அதில் தோன்றா தரப்பினராகிவிட்டேன் . என தரப்பில் முன்னிலையான வழக்கறிஞர் ராஜேந்திரனிடம் மேற்படி உத்தரவு சம்மந்தமாக ஏதும் கேட்டு தெரிந்துகொண்டேனா என்றால் மேற்படி மோசடியான ஆவணங்களில் உள்ள கையொழுத்து சம்மந்தமாக ஏதும் நடவடிக்கை இருந்ததா என கேட்டேன் அது சம்மந்தமாக உத்தரவு ஏதுமில்லை என தெரிவித்தார்.

29 மேற்படி 04.08.1997 ம் தேதிக்கு பிறகு தாவா சொத்து சம்மந்தமாக வழக்கு தாக்கல் செய்யப்படும் காலம் வரை நான் வில்லங்க சான்றிதழ் ஏதும் எடுத்துப்பார்த்தேனா என்றால் நான் வெளிநாடு சென்றுவிட்டேன் 2009 வந்தேன் தகவல் சொன்னார்கள் . எப்போது 04.08.1997 ல் உத்தரவு எனக்கு தெரியவந்தது என்றால் 2009 ல்தான் தெரியவந்தது.

30. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களுக்கான சான்றிட்ட நகலை எப்போது எடுத்தேன் என்றால் 2009 க்கு பிறகுதான் எடுத்தேன் . அதில் ஏதேனும் மாற்றம் உள்ளதா என்றால் அதில் மாற்றமில்லை . மேற்படி சார்பதிவாளர் பதிவு செய்துகொடுத்தபிறகு இந்த நீதிமன்றத்திலிருந்து எனக்கு அறிவிப்பு ஏதும் வந்ததாஎன்றால் இல்லை . இந்த வழக்கில் பிரதிவாதி என்ன கட்சி எடுத்துள்ளார் என நான் படித்துப்பார்த்தேனா என்றால் படித்துப்பார்த்தேன் தற்சமயம் ஞாபகமில்லை.

30. 04.08.1997 ல் மாவட்ட பதிவாளர் உத்தரவிற்கு பிறகு பிரதிவாதிகள் மற்றும் அவரது குடும்பத்தினார் 14.08.1997 ல் இந்நீதிமன்றத்தில் கேவியட் மனுக்கள் முறையே 97, 98, 99,100/1997 என்பதை தாக்கல் செய்து அதில் எனக்கு அறிவிப்பு அனுபப்பப்பட்டு அதை நான் கையொப்பம் செய்து பெற்றுக்கொண்டேன் என்றால் சரியல்ல.

32. பின்னர் 3 மாதங்கள் கழித்து பிரதிவாதிகள் மற்றும் அவரது குடும்பத்தினார் இந்நீதிமன்றத்தில் கேவியட் மனுக்கள் முறையே 129, 130, 131, 132/1997 என்பதை தாக்கல் செய்து அதிலும் எனக்கு அறிவிப்பு தாக்கல் சார்வு செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

33. பின்னர் 13.02.1998 ல் பிரதிவாதிகள் மற்றும் அவரது குடும்பத்தினார் இந்நீதிமன்றத்தில் கேவியட் மனுக்கள் முறையே 7, 8, 9, 10/1998 என்பதை தாக்கல் செய்து அதிலும் எனக்கு அறிவிப்பு தாக்கல் சார்வு செய்யப்பட்டது என்றால் சரியல்ல..

34. மேற்படி மாவட்ட பதிவாளர் விசாரணையில் இருதரப்பும் பங்கேற்று முறையாக விசாரித்து அதன் அடிப்படையில்தான் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல . பிரதிவாதியும் அவரது குடும்பத்தினரும் மேற்படி சொத்து உரிமையை நிலைநாட்டிக்கொள்வதற்கு எனக்கு 3 முறை 1997, 1998 ஆண்டுகளில் நீதிமன்றத்தின் மூலம் அறிவிப்பு அனுப்பியும் அதைப்பெற்றுக்கொண்டு 16 ஆண்டுகள் கழித்து நான் காலாவதியான வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

35 . மாவட்ட பதிவாளர் உத்தரவு 2009 ல் தெரியும் என்று நான் தற்சமயம் இதற்கு முன்னர் சாட்சியம் அளித்ததற்கு மாறாக நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல . நான்

இந்நீதிமன்றத்தில் முன்னுக்குபின் முரணான சாட்சியங்களை அளித்து வருகிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்து எனது அனுபவத்தில் உள்ளது என்றுதான் கட்சி நடத்துகிறேன் என்றால் சரிதான் . எனது அனுபவத்தை காண்பிக்கக்கூடிய ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

36. நான் போட்ட பிராதில் தாவா சொத்து என்னுடைய அனுபவத்தில்தான் இருக்கிறது என எங்காவது சொல்லியிருக்கிறேனா என்றால் இல்லை . 04.08.1997 ல் ஏற்பட்ட மாவட்ட பதிவாளர் உத்தரவு படி தாவா சொத்துக்கள் பிரதிவாதி மற்றும் அவரது குடும்பத்திற்கு ஆவணம் செய்யப்பட்டு அவரது அனுபவத்தில் தான் இருந்து வருகிறது என்றால் சரியல்ல.

37. வழக்கு தாக்கல் செய்த போது தாவா சொத்து காலிமனை என நான் கூறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். தாவா சொத்தின் தன்மையை பொறுத்து ஆய்வு செய்ய நீதிமன்ற ஆணையர் நியமிக்க நான் ஏதும் நடவடிக்கை எடுத்தேனா என்றால் இல்லை .. பிரதிவாதி மனு செய்து நீதிமன்ற ஆணையர் நியமிக்க மனு தாக்கல் செய்தால் நான் அதை ஆட்சேபனை செய்வேனா என்றால் மனுவை தாக்கல் செய்யச்சொல்லுங்கள் பின்னர் சொல்கிறேன்.

38. என்னால் தாவா சொத்தின் இயற்கை அமைப்பை காண்பிக்கக்கூடிய புகைப்படங்களோ, விடியோ பதிவுகளையோ நான் எடுத்து தாக்கல் செய்ய தயாராக உள்ளேனா என்றால் அது எனக்கு தேவைப்படவில்லை. தாவா சொத்தில் 2 அல்லது 3 கட்டிடங்கள் மற்றும் லாரி எடை மேடையும் உள்ளதா என்றால் தெரியாது . 2013 ம் ஆண்டுக்கு பிறகு தாவா சொத்தை நான் எப்போதாவது பார்த்தேனா என்றால் இல்லை.

39. நான் அவ்வாறு தாவா சொத்தை பார்வையிட்டிருந்தால் தாவா சொத்தில் என்ன உள்ளது என்பது தெரியவரும் என்றால் சரிதான் . இந்நீதிமன்றத்தின் காலஅவகாசத்திற்கு பிறகு நான் தாவா சொத்தை பார்வையிட்டு பின்னர் சாட்சியம் அளிக்க தயாரா என்றால் அது தேவையில்லை. வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கானது தள்ளுபடி செய்யவேண்டுமென்று சொன்னால் சரியல்ல.

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

(S/d.A.Seethalakshmi),
District Munsif
Mannargudi(FAC).